Transport for NSW

# சாலைப் பாதுகாப்பு



## பேருந்தில் இருக்கைப்பட்டி பாதுகாப்பு

**இருக்கைப்பட்டிகள் உயிரைக் காப்பாற்றுகின்றன**

பேருந்தில் இருக்கைப் பட்டி இருந்தால் அதை அணிய வேண்டும் என்பதே **சட்டம்**. இருக்கைப் பட்டி அணிவது விபத்தில் இருந்து தப்பிக்கும் வாய்ப்பை இரட்டிப்பாக்குகிறது மற்றும் காயமேற்படும் அபாயத்தைக் குறைக்கிறது.

ஒரு பேருந்தில், உங்கள் சொந்த இருக்கையில் அமர்ந்து, சரியாகப் பாதுகாக்கப்பட்ட மற்றும் சரிசெய்யப்பட்ட இருக்கைப்பட்டிடை அணிவது உங்கள் பொறுப்பு.

**இருக்கைப் பட்டியைச் சரியாக அணியுங்கள்**

இருக்கைப் பட்டியின் மடிப் பகுதி உங்கள் இடுப்பின் எலும்புப் பகுதியின் குறுக்கே தட்டையாக இருக்க வேண்டும் மற்றும் நாண் (sash) உங்கள் மார்பு மற்றும் தோள்பட்டையின் குறுக்கே இருக்க வேண்டும்.

உங்கள் இருக்கைப் பட்டி உறுதியாக சரி செய்யப்பட்டுள்ளதா என்பதை எப்போதும் உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

**இருக்கைப்பட்டி ஏன் முக்கியம்?**

எந்தவொரு வாகனத்திலும் இருக்கைப் பட்டி அணிவது விபத்து ஏற்பட்டால் உங்களைப் பாதுகாக்க உதவுகிறது.

விபத்தொன்றின்போது, இருக்கைப்பட்டி:

- வாகனத்தின் அதே வேகத்தில் உங்கள் உடலை மெதுவாக்க உதவுகிறது
- உங்கள் உடலின் வலுவான பகுதிகளில் (இடுப்பு மற்றும் மார்பு பகுதிகள்) தாக்கத்தின் சக்தியை பரப்புகிறது
- மற்ற பயணிகள் அல்லது வாகனத்தின் உள்ளே மோதுவதால் ஏற்படும் ஆபத்தை குறைக்கிறது
- ஓட்டுநர் அல்லது பயணிகள் வாகனத்திலிருந்து தூக்கி எறியப்படும் அபாயத்தைக் குறைக்கிறது.

**எப்பொழுதும் பாதுகாப்பாக இருக்கைப் பட்டியை இணைக்கவும்.**

இருக்கைப்பட்டிகள் பற்றிய கூடுதல் தகவலுக்கு **transport.nsw.gov.au/seatbelts** ஐப் பார்வையிடவும்




தனித்துவக் குறியீடு 45095361 ஜூன் 2024 © NSW க்கான போக்குவரத்து

NSW சாலைகளில் பல உயிர்கள் பலியாகியுள்ளன.
**நமது இலக்கு பூச்சியம் ஆகும்.**

NSW GOVERNMENT

TOWARDS ZERO